## 29.2 ஊராட்சி உதவியாளர்களுக்கு வழங்கப்படும் மதிப்பு ஊதியத்தை உயர்த்துதல் மற்றும் ஊராட்சி உதவியாளர் இல்லாத ஊராட்சிகளில் பகுதிநேர எழுத்தர்களைப் பணி அமர்த்த ஊராட்சித் தலைவர்களுக்கு அனுமதி வழங்குதல்

ஊரக வளர்ச்சி (இ5) துறை

அரசாணை (நிலை) எண். 230, நாள் : 15.10.1996

படிக்க :

1. ஊரக வளர்ச்சி துறையின் 28.11.90–ஆம் நாளிட்ட நிலை அரசாணை எண். 962.
2. ஊரக வளர்ச்சி இயக்குநரின் 17.8.95 நாளிட்ட கடிதம் ந.க.எண் 76619/91/ஆ2,
3. ஊரக வளர்ச்சி இயக்கநரின் 27.11.95 நாளிட்ட கடிதம் ந.க.எண் 77619/95/ஆ2,

**ஆணை**

தமிழகத்தில் 12583 ஊராட்சிகள் உள்ளன. அவற்றில் மக்கள் தொகை 1,500–க்கு மேல் உடைய ஊராட்சிகள் ஒவ்வொன்றிலும் ஒரு ஊராட்சி உதவியாளர் வீதமும் மக்கள் தொகை 1,500–க்கு குறைவாக உள்ள அருகில் உள்ள இரண்டு அல்லது மூன்று ஊராட்சிகளுக்கு சேர்ந்து ஒரு ஊராட்சி உதவியாளர் வீதமும் 1.1.1991 முதல் பணி அமர்த்தலாம் எனவும் அவ்வாறு பணி அமர்த்தப்படும் ஊராட்சி உதவியாளர்களுக்கு மதிப்பு ஊதியமாக மாதம் ரூ.400/– வீதம் வழங்கலாம் எனவும் பார்வையில் குறிப்பிட்டுள்ள அரசாணையில் ஆணைகள் வெளியிடப்பட்டன. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஊராட்சித் தலைவர்கள் / நிலையில் / இல்லாத/ ஊராட்சிகளின் தனி அலுவலர்களான வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ஊராட்சி உதவியாளர்களாகப் பணி அமர்த்தினர். தற்போது ஏறத்தாழ 6,237 ஊராட்சி உதவியாளர்கள் மட்டுமே உள்ளனர். ஊராட்சிகளில் நிதிநிலையைக் கருத்தில் கொண்டு, ஊராட்சி உதவியாளர்களுக்கு ஊதியம் வழங்குவதற்கு ஆகும் செலவை அரசு மானிய உதவியாக ஊராட்சிகளுக்கு முதற்கண் அளித்து விட்டு பின்னர் அதில் ஒரு பகுதியை (அதாவது, ஊராட்சிகள் முன்பு பகுதிநேர எழுத்தர்களுக்கு ஊதியமாக வழங்கி வந்த தொகைக்கு சமமான தொகையை) ஊராட்சிகளிடமிருந்து திரும்பப் பெற்று வருகின்றது.

2. தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994–ன் படி ஊராட்சிகளின் கடமைகள், அதிகாரம் ஆகிவற்றைக் கருத்தில் கொண்டு, ஊராட்சித் தலைவர்களுக்கு உதவியாகப் பணி அமர்த்தப்பட வேண்டிய பணியாளர்கள், அவர்களுக்கு அளிக்கப்படவேண்டிய ஊதிய அளவு, ஊராட்சி உதவியாளர்கள் காலச்சம்பள ஏற்றமுறையில் ஊதியம் கோரியுள்ளது ஆகியவை குறித்து அரசு ஆய்வு செய்து கீழ்க்கண்டவாறு ஆணையிடுகின்றது.

(அ) தற்போது பணியிலிருக்கும் ஊராட்சி உதவியாளார்கள் தொடர்ந்து பணியில் இருக்கலாம். இவர்களுக்கு தற்போது மதிப்பு ஊதியமாக ரூ.400 (ரூபாய் நானூறு மட்டும்) அளிக்கப்பட்டுவருவதை ரூ.650/– (ரூபாய் அறுநூற்று ஐம்பது மட்டும்) ஆக என உயர்த்தப்படுகின்றது.

(ஆ) தற்போது ஊராட்சி உதவியாளர்கள் இல்லாத ஊராட்சிகளைப் பொறுத்தவரையில், ஒவ்வொரு பகுதிநேர எழுத்தர்களைப் பணி அமர்த்த ஊராட்சித் தலைவர்களுக்கு அனுமதி அளிக்கப்படுகின்றது. பகுதிநேர எழுத்தர்களுக்கு தொடர்புடைய ஊராட்சிகளின் மக்கள் தொகையில் கீழ்க் குறிப்பிட்டுள்ள தொகைக்கு மிகாமல் ஒவ்வொரு மாதமும் மதிப்பு ஊதியம் வழங்கலாம்.

| ஊராட்சியின் மக்கள் தொகை | மதிப்பு ஊதியம் |
|---|---|
| (1) | (2) |
| 5,000–த்தை விட கூடுதல் | ரூ. 550/– |
| 4,001 முதல் 5,000 வரை | ரூ. 500/– |
| 3,001 முதல் 4,000 வரை | ரூ. 450/– |
| 2,001 முதல் 3,000 வரை | ரூ. 400/– |
| 2,000 மற்றும் 2,000–க்கு குறைவு | ரூ, 350/– |

(இ) ஊராட்சி உதவியாளர்களும், பகுதிநேர எழுத்தர்களும் ஊராட்சிப் பணியாளர்கள் என்பதால் ஊராட்சி தலைவர்களின் கட்டுப்பாட்டில் பணியாற்றுவார்கள். பணியமர்த்தும் அதிகாரத்தைப் போன்று பணி நீக்கம் செய்யும் அதிகாரமும் ஊராட்சித் தலைவருக்கு உண்டு. எற்கெனவே ஊராட்சி உதவியாளர்களுக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள கடமைகளும் பொறுப்புகளும் ஊராட்சி பகுதிநேர எழுத்தர்களுக்கு பொருந்தும்.

(ஈ) ஊராட்சி உதவியாளர்களுக்கு பணி அமர்த்தப்பட்டுள்ள ஊராட்சிகள் அரசிடமிருந்து முதற்கண் மானிய உதவி பெற்று ஊதியம் வழங்கிவிட்டு பின்னர் ஒரு பகுதியை திருப்பி செலுத்தும் முறை பகுதி நேர எழுத்தர்களைப் பணி அமர்த்தும் ஊராட்சிகளுக்கும் பொருந்தும். ஊராட்சி உதவியாளர் பணியமர்த்தப்பட்டுள்ள ஊராட்சிகளும் பகுதிநேர எழுத்தர்கள் பணி அமர்த்தப்படும் ஊராட்சிகளும் இனிமேல் மாதம் ரூ.200/– வீதம் திருப்பிச் செலுத்த வேண்டும்.

(உ,) தற்போதிருக்கும் ஊராட்சி உதவியாளர் பணியிடம் காலியாகும் போது அதில் பகுதிநேர ஊராட்சி எழுத்தரை பணி அமர்த்த ஊராட்சித் தலைவரே முடிவு செய்யலாம். காலி இடங்களில் ஊராட்சி உதவியாளர்களை பணியமர்த்தல் கூடாது.

(ஊ,) பகுதிநேர எழுத்தர்களாக பணி அமர்த்தப்படுபவர்கள் பத்தாம் வகுப்பு (எஸ்.எஸ்.எல்.சி) தேறியவர்களாகவும். 28 வயதை கடக்காதவர்களாகவும் அந்தந்த ஊராட்சியில் குடியிருப்பவராகவும் இருக்க வேண்டும்.

3. ஊராட்சி உதவியாளர்கள் / ஊராட்சி பகுதி நேர எழுத்தர்களுக்கு ஊதியம் வழங்கும் பொருட்டு ஊராட்சிகளுக்கு மான்ய உதவி அளிப்பதை கீழ்கண்ட கணக்குத் தலைப்பில் செலவு எழுதப்பட வேண்டும்.

> “2515 ஏனைய ஊரக வளர்ச்சித் திட்டங்கள் – 101 ஊராட்சி நிறுவனம் – 1 திட்டத்தில் சேராதது – AN கிராம பஞ்சாயத்துகளில் பஞ்சாயத்து உதவியாளர்கள் நியமனம் – 09 உதவி மானியங்கள் – 1. ஊராட்சி உதவியாளர்களுக்கு மதிப்பூதியம் (துகவல் தொகுப்பு குறியீடு 2515 00 101 AN 0915) “

ஊராட்சிகள் திருப்பித் செலுத்தும் தொகையை கீழ்க் குறிப்பிட்டுள்ள கணக்குத் தலைப்பில் வரவு எழுத வேண்டும்.

> “0510 00 ஏனைய ஊரக வளர்ச்சித் திட்டங்கள் – 808 ஏனைய வரவுகள் – AK ஊராட்சி உதவியாளர்களுக்கு மதிப்பூதியம் வழங்குதல் தொடர்பாக வசூலிக்கப்படும் வரவுகள்” (துகவல் தொகுப்பு குறியீடு 0515 00 800 AK 0008)

4. இந்த ஆணை நிதித்துறையின் 11.10.96 நாளிட்ட அலுவல் சார்பற்ற குறிப்பு எண். 78929/நிதி(ஊரக வளர்ச்சி / 96–1 ன் ஒப்புதலுடன் வெளியிடப்படுகின்றது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**எஸ். நாராயண்**
சிறப்பு ஆணையர் மற்றும் அரசு செயலாளர்